**2026 பிப்ரவரி மாதம் 05– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 79/2021**

O.S. No.: 79/2021 – சண்முகசுந்தரம் த/பெ.ராமசாமி PW3 05.02.2026

**சாட்சி அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1. நான் பொள்ளாச்சியில் வசித்து வருகிறேன். தாவா சொத்து தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, போடிமெட்டில் உள்ளது. நான் இந்தியன் வங்கியில் எந்த ஆண்டில் கடன் வாங்கினேன் என்றால் 2012ம் வருடம் கடன் வாங்கினேன். மேற்படி கடனை எந்த காரணத்திற்காக வங்கியில் வாங்கினேன் என்றால் தாவா சொத்தை மேம்படுத்துவதற்காக வாங்கினேன். கடன் வாங்கியப்போது தாவா சொத்து மேம்படுத்தப்படாத காடாக இருந்தது என்றால் 50 சதவீதம் மேம்படுத்தப்பட்டு தான் இருந்தது. நான் பொள்ளாச்சியில் வசித்து வருவதாலும், தாவா சொத்து போடிமெட்டில் இருந்ததால் அவ்வப்போது வந்து பராமரிக்க இயலாததால் பவர் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வங்கியில் கடன் வாங்கியப்பிறகும், பவர் கொடுத்த இடைப்பட்ட காலத்தில், தாவா சொத்தில் எந்த வகையான மேம்பாடு செய்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்து பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தில் நான் வங்கியில் பெற்ற கடன் தொகையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பவர் பத்திரத்தில் நான் வங்கியில் பெற்ற கடன் வட்டியுடன் செலுத்தி, செல்இரசீது கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். நான் கடன் வாங்கிய 2012 ம் ஆண்டிலிருந்து பவர் கொடுத்த 2015 ம் வருடம் வரை வங்கியில் அசலோ, வட்டியோ செலுத்தவில்லை என்றால் செலுத்தியுள்ளேன். மேற்படி காலத்தில் அசலோ, வட்டியோ செலுத்தியதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.4 மூலம் பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அறிவிப்பை தவிர 1ம் பிரதிவாதியிடம் பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, அவ்வப்போது கேட்டுள்ளேன்.

3. எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் பணம் கேட்டேன் என்ற விபரம் எனக்கு ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. 2015 ம் ஆண்டு என்னிடமிருந்து 1ம் பிரதிவாதி பெற்ற பவரின் அடிப்படையில் தான் 2018 ம் ஆண்டு 1ம் பிரதிவாதியின் மகன் பெயரில் கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2018 ம் ஆண்டில் 2ம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்னர் நான் பெற்ற வங்கி கடன்களை அடைத்துவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தற்போது கடன்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அசல் ஆவணங்களை வங்கியில் ஒப்படைத்து கடன் வாங்கினேன் என்றால் சரிதான். கடன் தீர்க்கப்பட்டுவிட்டப்பிறகு வங்கியிலிருந்து அசல் ஆவணங்களை நான் திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

4. 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த பிறகு, வங்கியிலிருந்து நான் பெற்ற அசல் ஆவணங்களை 2ம் பிரதிவாதியிடம் நான் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல, வங்கி கடனை அடைத்து வங்கியில் அசல் ஆவணங்களை நான் பெற்றவுடன் 2ம் பிரதிவாதி என்னுடன் இருந்தார், அவர் அசல் ஆவணங்களின் ஒளிப்பதிவு நகல் எடுத்துவிட்டு திரும்ப அசல் ஆவணங்களை என்னிடம் கொடுப்பதாக கூறியதின் அடிப்படையில் அசல்

ஆவணங்களை 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன், இரவு 7.00 மணிவரை அவர் வரவில்லை, அதன் பின்னிட்டு அவரை தொடர்பு கொள்ள முயற்சித்தும் எனது அழைப்பை ஏற்கவில்லை. மேற்படி விபரங்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியிலிருந்து சொத்தின் உரிமையாளர், பாத்தியஸ்தர் என்ற முறையில் அவர் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் பவர் கொடுப்பதற்கு முன்போ, பின்போ நான் கீழே விழுந்து எனக்கு காலில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. கடன்கள் தீர்த்துவிட்ட நிலையில், வங்கியில் அசலோ, வட்டியோ செலுத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதிகள் தீர்த்து பத்திரத்தை பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதியிடம் எனது மாமனார் மூலமாக கொடுத்த பணத்தை வைத்து பிரதிவாதிகள் கடன்களை அடைத்துள்ளார். எனது மாமனார் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு எந்த தேதி, மாதம், வருடம், எவ்வளவு தொகை கொடுத்தோம் என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. கடன் வாங்கிய 2012–லிருந்து பவர் கொடுத்த 2015ம் ஆண்டு வரை தாவா சொத்தில் என்னென்ன விவசாயம் செய்தோம் என்று குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் விவசாயம் செய்வதற்கு அவ்வாறு ஆவணம் வாங்க முடியாது. பத்திரத்திலிருந்து கிரைய தொகை எவ்வளவு என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் ரூ.10,46,540/– ஆகும். இந்தியன் வங்கியின் கணக்கு எண்ணானது என் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் கூட்டுக் கணக்காக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு

எண்.998171800 என்றால் சரிதான். கிரையத் தொகையின் பாதித் தொகை கடனிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய பாக்கி கிரையத் தொகை எனது மாமனாரிடம் கொடுத்து தீர்க்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. தற்போது எனது மாமனார் உயிருடன் இல்லை. எனது மாமனார் இறந்துவிட்டக் காரணத்தினால் பிரதிவாதிகள் மீதிக் கிரையத் தொகையை எனது மாமனாரிடம் கொடுக்கவில்லை என்று எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, 2024–ல் இறந்தார்.

7. இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து விற்பனைத் தொகை கொடுக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி என் முகவர் என்பதால் அவர்மீது மட்டும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சரியான முகவரி தெரிவிக்காததால் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, ஆவணத்தில் இருந்த முகவரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. பொய்யான காலாவதியான வழக்கு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.05 16:15:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
05.02.2026.